யாழ். இந்து மகளிர் கல்லூரி

பரிசளிப்பு விழா

28.10.2005

அதிபர் அறிக்கை

பிரதம விருந்தினர்

திரு. கந்தையா பரமேஸ்வரன்

B.A.(Hons) SLAS I

ஐக்கிய நாடுகள் வதிவிட நகர முகாமையாளர்

திருமதி. ஜயமலர் பரமேஸ்வரன்

JAFFNA HINDU LADIES COLLEGE
01 NOV 2007

நிகழ்ச்சி நிரல்

01. இறைவணக்கம்

02. வரவேற்புப் பாடல்

03. வரவேற்புரை : செல்வி துளசி கந்தசாமி (சிரேஷ்ட மாணவத்தலைவி)

04. அதிபர் அறிக்கை : திருமதி சரஸ்வதி ஜெயராசா

05. ஆங்கிலப் பேச்சு : செல்வி சகிதா ஜெயரட்ணம்

06. தமிழ்ப்பேச்சு : செல்வி கந்ததர்சினி சந்தணகுமார்

07. பிரதம விருந்தினர் உரை : திரு.கந்தையா பரமேஸ்வரன் (B.A. (Hons) S.L.A.S I

08. பரிசில் வழங்கல் : திருமதி ஜயமலர் பரமேஸ்வரன்

09. நன்றியுரை : செல்வி கலாவதி துரைராஜா
(துணை சிரேஷ்ட மாணவத்தலைவி)

10. கல்லூரிக்கீதம்

வரவேற்புப் பாடல்.

செந்தமிழிற் சிவநெறியிற் திழைத்த எங்கள்
செல்விகள்தம் கல்வியுறு சிறப்பைப் போற்றி
எடுக்குமெழிற் பரிசளிப்பு விழாசி றக்க
பந்தாகய மலரினொடு விருந்தி னராய்
பாங்குடனே வருகைதரு பரமேஸ் வரனே
எந்தமிரு கரம் கூப்பி வரவேற் றன்பால்
வாழ்த்துகிறோ மின்தமிழில் வளமே வாழி.

பல்துறையுள் யாழ்பல்கலைக் கழகம் போற்றும்
பதிவாள ராகப்பணி பாரிற் செய்தாய்
வல்லநில ஆணையாள ராக விருந்தே
வாண்மையுள சேவையினை வழங்கி நின்றாய்
நல்வளமுள் அரசசார் பற்றே இயங்கும்
நவில் ஐக்கிய நாட்டுநிறு வனமூ டாக
பல் வளமெம் மக்கட்திப் பாரிற் சேரப்
பணிபுரியு பரமேசு வரனே வாழி.

மாணவரின் கல்விதனில் மாண்பு வேண்டி
மாகாணக் கல்விச்செய லாள ராகிக்
காணவரு அதிபரொடா சிரியர் தாமும்
காட்டுகுறை யத்தனையும் களைந்து நின்றாய்
பேணுமிந்து கலா சார அமைச்சிற் சேர்ந்தே
பிரியமொடு அரும்பணியுன் பேராற் செய்தாய்
ஊணதனை மறந்தெமக்காய் உழைத்து நின்ற
உத்தமனே நீணாள் நீ வாழ்க நிலைத்தே.

பகரரிய சேவை தனைப் பாருக் காற்றி
பணிஓய்வு பெற்றபின்பும் ஓய்ந்தி டாது
இகமதிற்பல் நிறுவனத்தோ டிணைந்து நின்றே
எம்மக்கள் வாழ்வுயர உழைத்தல் கண்டே
அகமகிழ்விற் பிரதமவிருந் தினரா யும்மை
அழைத்துப் பெரும் கௌரவத்தை அன்பாற் தந்தே
தகவுடையெம் கல்லூரிச் சமூகத் தோடு
தழைத்தோங்கு மாணவரும் வாழ்த்தி னோமே.

சரிநிகரில் கல்லூரிச் சமூக வாழ்த்தும்
சகமதில்நின் பணிபெறுவார் சாற்றும் வாழ்த்தும்
அரியஅபி விருத்திதரு அமைப்பார் வாழ்த்தும்
அதிபரொடு ஆசிரியர் அளித்த வாழ்த்தும்
பரிசுபெறு மாணவிகள் பகரும் வாழ்த்தும்
பழையமா ணவர்சங்கப் பண்பார் வாழ்த்தும்
உரியபெரு காவலிணை உமக்கு நல்க
ஓன்தமிழ் போல் வாழியநீர் பன்நூ றாண்டே.

வந்தவிருந் தினர்வாழி வளங்கள் வாழி
வாழ்த்தஎமை வரு பரமேஸ் வரனும் வாழி
சந்த குரு முறைவாழி சைவம் வாழி
சான்றிதழ்கள் தரவருஜய மலரும் வாழி
இந்த விழாச் சிறப்புறநின் றுழைத்தோர் வாழி
இளமறையும் வாழிதிரு முறையும் வாழி
நந்தமிழும் வாழிவள நாடும் வாழி
யாழ் இந்து மகளிர்கல்லூரிநனி வாழி வாழி.

அதிபர் அறிக்கை

பேரன்பிற்கும் பெருமதிப்பிற்குமுரிய இன்றைய பரிசுத்தினத்தின் பிரதம விருந்தினரும் கல்லூரியின் சஞ்சிகையைவெளியீடு செய்து வைப்பவருமான முன்னைநாள் கல்வி பண்பாட்டு விளையாட்டுத்துறை அமைச்சின் செயளாளரும் இன்றைய ஜக்கிய நாடுகள் நகர முகாமையாளருமான திருவாளர் கந்தையா பரமேஸ்வரன் அவர்களே,

எமது மாணவிகளுக்கு பரிசில்களை வழங்கி கௌரவித்து உற்சாகமூட்ட வருகை தந்திருக்கும் பிரதம விருந்தினர் அவர்களின் அன்புப்பாரியார் திருமதி ஜயமலர் பரமேஸ்வரன் அவர்களே,

ஆலயக் குருக்கள் அவர்களே,
பிரதிக் கல்விப்பணிப்பாளர்களே,
உதவிக் கல்விப்பணிப்பாளர்களே,
நல்லூர்க் கோட்டக் கல்விப் பணிப்பாளர் திரு. K.V. குணசேகரம் அவர்களே,
ஏனைய கல்லூரிகளின் அதிபர்களே,
பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் செயலாளர் அவர்களே,
உறுப்பினர்களே,
பழைய மாணவர் சங்க உப தலைவி அவர்களே,
பழைய மாணவிகளே,
பெற்றோர்களே,
நலன் விரும்பிகளே,
ஆசிரியர்களே,
மாணவர்களே,

உங்கள் அனைவருக்கும் எனது அன்பு நிறைந்த வணக்கத்தைக் கூறி வருக வருக என வரவேற்பதுடன் யாழ் இந்து மகளிர் கல்லூரியின் **2004**ஆம் ஆண்டிற்கான பரிசுத்தின அதிபர் அறிக்கையை உங்கள் முன் சமர்ப்பிப்பதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

இன்றைய பரிசளிப்பு விழாவிற்குப்பிரதம விருந்தினராக வருகை தந்து பெருமைப்படுத்துவதுடன் கல்லூரியின் சஞ்சிகையையும் வெளியிட்டு வைக்கவிருக்கும் முன்னை நாள் இலங்கை நிர்வாகசேவை உத்தியோகத்தரும் ஜக்கிய நாடுகள் நகர முகாமையாளருமான திருவாளர் கந்தையா பரமேஸ்வரன் அவர்களை வரவேற்பதில் பேருவகையடைகிறேன்.

இன்றைய பரிசுத்தினத்தின் பிரதம விருந்தினர் அவர்கள் யாழ்ப்பாணம் கந்தர்மடத்தில் பெருமையும், இறைபக்தியுமுடைய கந்தையா மங்கயற்கரசி தம்பதிகளுக்கு மகனாகப்

பிறந்தார். தனது ஆரம்பக் கல்வியை கந்தர்மடம் ஆரம்பப் பாடசாலையிலும் இடைநிலைக் கல்வியை யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியிலும் மேற்கொண்டார். கல்லூரியில் இருந்த காலத்தில் சிறந்த மாணவனாக விளங்கியதுடன் க.பொ.த சாதாரண, உயர்தரப் பரீட்சைகளில் முதற் பிரிவில் சித்தியடைந்தார். கல்லூரிக் காலத்தில் உதைபந்தாட்ட விளையாட்டில் ஆர்வமுடன் பங்குபற்றி வெற்றியைப் பெற்று அணிக்குப் பெருமை தேடித்தந்தார்.

இந்துக் கல்லூரியில் இருந்த காலத்தில் வரலாற்றுக் கழகம், குடியியல் கழகம் ஆகியவற்றில் உபதலைவராகவும், தலைவராகவும் இருந்ததுடன் புவியியற் கழகத்தில் உபசெயலாளராகவும் பதவி வகித்து அப்பாடங்களில் தனக்குள்ள தேர்ச்சியை வெளிப்படுத்தியுள்ளார். உயர்தரப் பரீட்சையை நிறைவு செய்த பின் சிறிது காலம் தற்காலிக ஆசிரியராகவும் இந்துக் கல்லூரிக்குத் தனது சேவையை அளித்துள்ளார்.

பேராதனைப் பல்கலைக்கழகத்தில் உயர் கல்வியை மேற்கொண்ட இவர் 1966ம் ஆண்டு புவியியற் சிறப்புப் பட்டதாரியாக வெளியேறினார். பல்கலைக்கழகத்தில் சிறந்த மாணவனாக விளங்கியதுடன் விளையாட்டுக்களிலும் பங்கு பற்றினார். 1962, 1963, 1964, 1965 ஆகிய ஆண்டுகளில் மார்க்கஸ் பெர்ணான்டோ மண்டபத்தினரை உதைபந்து விளையாட்டில் முன்னணியில் வெற்றி பெற வைத்த பெருமை இவருக்குண்டு. பூப்பந்து, மேசைப்பந்து விளையாட்டுக்களிலும் சிறப்பாகச் செயற்பட்டார்.

இவர் நெதர்லாந்தில் ஹக் (Hague) நகரில் சமூகக்கல்வி நிறுவனத்தில் 1982ம் ஆண்டு தனது பட்டப்பின் கல்வியை மேற்கொண்டு கிராமியக் கொள்கையும் திட்டமிடலிலும் டிப்புளோமா பட்டத்தைப் பெற்றார்.

பல்கலைக்கழகத்தில் சிறப்புச் சித்தி பெற்ற இவர் பேராதனைப் பல்கலைக்கழகத்திலும் கொழும்புப்பல்கலைக்கழகத்திலும் 1966ம் ஆண்டு தொடக்கம் 1968ம் ஆண்டு வரை தற்காலிக புவியியல் உதவி விரிவுரையாளராகக் கடமையாற்றினார். வட்டுக்கோட்டையில் யாழ்ப்பாணக் கல்லூரியிலும் பட்டதாரி மாணவர்களிற்கு விரிவுரைகளையாற்றித் தனது புவியியல் புலைமையைப் புலப்படுத்தியுள்ளார். யாழ்ப்பாணம் கனிஷ்ட தொழில்நுட்பக் கல்லூரியில் 1968-1969ம் ஆண்டுகளில் வருகை விரிவுரையாளராகப் பணிபுரிந்து வர்த்தகப் புவியியலைக் கற்பித்துள்ளார். இலங்கைச் சீமெந்துக் கூட்டுத்தாபனத்தில் 1969ம் ஆண்டு பட்டதாரிப் பயிலுனராகப் பணிபுரிந்துள்ளார்.

1970ம் ஆண்டு இலங்கை நிர்வாக சேவை வகுப்பு V இல் காலடி வைத்த இவர் படிப்படியாக முன்னேறி உயர் பதவிகளை வகித்தார். நிர்வாக சேவை வகுப்பு ii இல் 1978ம்

ஆண்டு உள்வாங்கப்பட்டார். வகுப்பு இரண்டு தரம் ஒன்றுக்கு 1980ம் ஆண்டு பதவியுயர்வு பெற்ற இவர் 1990ம் ஆண்டு இலங்கை நிர்வாக சேவை வகுப்பு i க்கு பதவியுயர்வு பெற்றார்.

நிர்வாக சேவை உத்தியோகத்தராகப் பல பதவிகளை வகித்தார். 1970-1972 வரை துணுக்காய் நில அலுவலகத்தில் மாவட்ட நில அதிகாரியாகவும் 1973-1975 வரை கிளிநொச்சி அலுவலகத்தில் மாவட்ட நில அதிகாரியாகவும் பணிபுரிந்தார். 1976-1978 வரை கிளிநொச்சியில் சிரேஷ்ட மாவட்ட நில அதிகாரியாகவும் கடமையாற்றினார். இத்துறையில் சிறந்த நிர்வாகி என்ற பெயரினையும் பெற்றார். 1981-1982 வரை அம்பாறையில் மேலதிக அரசாங்க அதிபராகவும் பணிபுரிந்தார்.

1982-1989 வரை மன்னாரில் உள்ளூராட்சி பிராந்திய உதவி ஆணையாளராகப் பணிபுரிந்தார். வடக்கு, கிழக்கு மாகாண சபையில் புனர்வாழ்வு அமைச்சில் சிரேஷ்ட உதவிச் செயலாளராகவும், நில ஆணையாளராகவும், வடக்குக் கிழக்கு மாகாணசபை உள்ளூராட்சி ஆணையாளராகவும் 1989ம் ஆண்டு மூன்று பதவிகளையும் ஒருங்கே வகித்தமை இவரது ஆளுமையைப் புலப்படுத்தும் பதவிகளாகும்.

16.12.1989 மார்கழி மாதத்திலிருந்து 15.03.1997ம் ஆண்டு வரை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் பதிவாளராக இருந்து பல்கலைக் கழகத்தின் வளர்ச்சிக்குத் தன்னாலான பங்கினை ஆற்றினார். அக்காலத்தில் எங்கள் கல்லூரியின் பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினராக இருந்து கல்லூரியின் வளர்ச்சிக்குத் தன்னாலான ஒத்துழைப்பினை நல்கினார். 16.03.1997 தொடக்கம் 01.03.1998 வரை நில ஆணையாளராகப் பணிபுரிந்தார். 01.03.1998-20.04.2000 வரை வடக்குக் கிழக்கு மாகாணத்தில் மாகாணப் பொதுச் சேவைக் குழுவின் செயலாளராகப் பணியாற்றினார். அங்கு அவரது திறமையைப் பாராட்டிய மாகாண அமைச்சு 20.04.2004 இல் வடக்குக் கிழக்கு மாகாண கல்வி, பண்பாட்டு விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் பதவியை அளித்துக் கௌரவித்தது. அப்பதவியை வகித்த காலத்தில் தமிழ்ப் பிரதேசப் பாடசாலைகளின் வளர்ச்சிக்குத் தன்னாலான பங்கினை ஆற்றினார் என்றால் மிகையாகாது. 2001-2003 சித்திரை வரை இந்து கலாசார அமைச்சின் செயலாளராகப் பணிபுரிந்தார். 01.05.2004-31.04.2005 சித்திரை வரை வடக்குக் கிழக்கு மாகாண சபையில் பிரதம செயலாளர் அலுவலகத்தில் உள்ளூராட்சி மேலதிக செயலாளராகப் பணிபுரிந்தார். தற்பொழுது யு.என் அரச சார்பற்ற நிறுவனத்தில் வதிவிட அலுவலகத்தில் நகர முகாமையாளராகப் பணியாற்றி வரும் இவர் தனது பதவிக்காலத்தில் திறம்பட நிர்வாகத்தை ஆற்றி சிறந்த அதிகாரி என்ற மகுடத்தைச் சூட்டிக்கொண்டார்.

அரச பதவிகளை வகித்ததுடன் நில்லாது தனது உத்தியோகத்திற்குப் புறம்பான விடயங்களிலும் தனது கவனத்தைச் செலுத்தினார். 1971-1972 துணுக்காய் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவராகவும் 1974-1975 கராச்சி தெற்கு கூட்டுறவுச் சங்கத் தலைவராகவும் 1977-1978 பழுகாமம், மண்டூர், நவக்கிரி கூட்டுறவுச் சங்கத் தலைவராகவும் இருந்து சமூகப் பணியாற்றினார். 1977-1978 வரை புத்தூர் கிராம சபையிலும், 1980-1981 வரை காரைதீவு கிராம சபையிலும் கிராம சபையின் விசேட ஆணையாளராகப் பணியாற்றினார்.

நல்லூர் கந்தனில் தீராத பற்றுள்ள இவர் பேராதனைப் பல்கலைக்கழக குறிஞ்சிக் குமரன் ஆலயத்தின் பட்டதாரிகள் சங்கத் தலைவராக 1971-1972 வரை பதவி வகித்து அக்கோயிலின் எழுச்சிக்கு வழி வகுத்தார். திருக்கேதீஸ்வரம் மகாசிவராத்திரி மடப் பரிபாலன சபையின் தலைவராகவும் விளங்கிச் சமயப் பணியாற்றினார். இரண்டாவது உலக இந்து மகாநாட்டின் வெற்றியில் இவருக்கும் பெரும் பங்குண்டென்றால் மிகையாகாது. 1987-1988 வரை மன்னார் மாவட்ட சூழல் நிறுவனத்தின் செயலாளராக விளங்கினார். அத்துடன் மன்னார் மாவட்ட வீடமைப்புக் குழுவின் இணைச்செயலாளராகவும் விளங்கினார். மன்னார் மாவட்ட அபிவிருத்திச் சபையின் பிரதிச் பிரதிச் செயலாளராக 1982-1988 வரை விளங்கினார். 1972 இல் துணுக்காய் விளையாட்டுக் கழகத்தின் தலைவராகவும் விளங்கினார்.

இத்தகைய பதவிகளை வகித்துத் தமிழ்ப் பிரதேசத்தின் வளர்ச்சிக்கும் எழுச்சிக்கும் பாடுபட்ட இவர் எமது கல்லூரிக்கு அண்மையில் வசிப்பவரும், கல்லூரியின் வளர்ச்சியில் அக்கறை கொண்ட ஒருவருமாவார். கல்லூரியின் சஞ்சிகையான "சக்தி" சஞ்சிகை மீண்டும் வெளிவர வேண்டுமென்ற பேரவாக் கொண்டவர். அது மாத்திரமன்றிக் கேட்கும் போதெல்லாம் தன்னாலான உதவியைச் செய்பவர்.

தான் கல்வி கற்ற இந்துக் கல்லூரியின் வளர்ச்சிக்கு அதன் கொழும்பு, யாழ்ப்பாண பழைய மாணவர் சங்கத்தில் தலைவர், செயலாளர், உறுப்பினர் போன்ற பதவிகளை வகித்து தன்னாலான் உதவிகளையும், ஆலோசனைகளையும் வழங்கியதுடன் இன்று வரை தனது சேவையை ஆற்றி வருகிறார். இவ்விதம் தனது நீண்டகால அரச சேவையில் தனக்கென ஒரு இடத்தைப் பெற்ற இவர் தமிழுக்கும், இந்துப் பண்பாட்டிற்கும் ஆற்றிய அளப்பரிய சேவையை மறக்க முடியாது.

எமது பிரதம விருந்தினர் அவர்களின் பாரியார் திருமதி ஜயமலர் பரமேஸ்வரன் அவர்கள் தையிட்டி என்னும் ஊரில் நடராசா சிவபாக்கியம் தம்பதிகளுக்கு ஐந்தாவது மகளாகப் பிறந்து தனது ஆரம்ப இடைநிலைக் கல்வியை சுன்னாகம் இராமநாதன்

கல்லூரியில் கற்றார். இயல்பாகவே அடக்கமும் பொறுமையும் உள்ள இவர் சிறந்த இல்லத்தரசியாக விளங்க வேண்டுமென்ற பெரு நோக்குக் கொண்டவர். தனது கணவனின் உயர்ச்சிக்குப் பக்க பலமாக நின்று குடும்பச் சுமையைத் தானே ஏற்று நல்ல முறையில் குடும்பத்தை வழி நடத்திச் சென்றார். தனது பிள்ளைகளை நல்ல நிலைக்குக் கொண்டுவர வேண்டுமென்று பாடுபட்டு வெற்றியும் கண்டார். இத்தகைய நல்லதோர் பெண்மணியின் வருகை எமது மாணவிகளிற்கு ஒரு முன் மாதிரியாக விளங்குவதுடன் அவரது கரங்களினால் பரிசில்களை வாங்குவதற்குக் கிடைத்த வாய்ப்பினைப் பெரும் பேறாகவே கருதுகின்றோம்.

இத்தகைய சிறப்பு வாய்ந்தவரும், கல்லூரியில் பற்றுமுள்ள ஒருவரைப் பிரதம விருந்தினராகக் கொண்டு, கல்லூரியின் சக்தி சஞ்சிகையை வெளியிட்டு வைத்து, மாணவர்களிற்கு நல்லுரை வழங்கும் சந்தர்ப்பம் கிடைத்தமை எமது மாணவர்களிற்குக் கிடைத்த நல்வாய்ப்பென்றே கூறலாம்.

மாணவர் தொகை

தரம்	6-11	1291
தரம்	12-13	636
மொத்தம்		1927

ஆசிரியர் தொகை

எமது கல்லூரியில் **66** ஆசிரியர்கள் கடமையில் ஈடுபட்டுள்ளனர். இவர்களுள் திருமதி.வே.பேரின்பநாதன் அவர்கள் பிரதி அதிபராகவும், திருமதி.மீ.செல்லையா அவர்கள் உபஅதிபராகவும் பணிபுரிகின்றார்கள். திருமதி.த.ச..யோகீஸ்வரன், திருமதி.ச.நரேந்திரன் ஆகியோர் உயர்தரப்பிரிவிற்கு மேற்பார்வைப்பொறுப்பாளர்களாகவும், திருமதி.கா.சிவநேசன், திருமதி.ரோ.பாலஸ்கந்தன், திருமதி.ஜெ.சுஜிதன், திருமதி.க.பூலோகசிங்கம், திருமதி.பி.கலைநாதன் திருமதி.ம.சீவரட்ணம் ஆகியோர் இடைநிலைப் பிரிவின் பகுதித் தலைவர்களாகவும் பணிபுரிகின்றனர்.

புதிதாக இணைக்கப்பட்டோர்

நடனப்பட்டதாரி ஆசிரியர்களாக திருமதி.கா.நாகேந்திரநாதன் திருமதி.ய.பிறேமச்சந்திரன் ஆகியோரும், திருமதி.சி.பாக்கியராஜா சித்திரப் பயிற்சி ஆசிரியராகவும் எமது ஆசிரியர் குழாத்துடன் இணைந்து கொண்டனர். இவர்களை வரவேற்பதில் மகிழ்ச்சியடைவதுடன் ஏனைய ஆசிரியர்களுடன் இணைந்து கல்லூரியின் வளர்ச்சிக்குப் பாடுபட வேண்டுமென வேண்டுகின்றேன்.

தற்காலிக இணைப்புப் பெற்றோர்

பட்டதாரிப் பயிலுனர் ஆசிரியர்களாக திருமதி.ரஜிதா.தனேஸ்குமார், செல்வி.சிவநந்தினி சிவசோதி, செல்வி.சியாமளா.பாலசிங்கம், திரு.லோகநாதன்.சரவணமுத்து ஆகியோரும் எமது கல்லூரியில் இணைக்கப்பட்டுள்ளனர். திருமதி.அ.சுகிர்தராஜா தற்காலிக நடன ஆசிரியராக நியமிக்கப்பட்டுள்ளார். திருமதி. கோபாலகிருஸ்ணன் தற்காலிக நடன ஆசிரியராகக் கடமையாற்றி மீண்டும் சொந்தப் பாடசாலைக்குச் சென்றுள்ளார். அவரது சேவைக்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். திருமதி.ச.கொன்சன்ரைன் முகாமைத்துவ உதவியாளராக இணைக்கப்பட்டுள்ளார்.

ஓய்வு பெற்றோர்

எமது கல்லூரியில் பகுதித்தலைவராகவும் ஆங்கில ஆசிரியராகவும் பணிபுரிந்த திருமதி ஞா.வீரகத்திப்பிள்ளை அவர்கள் ஓய்வு பெற்றுள்ளார். இவர் கல்லூரியில் இருந்த காலத்தில் ஆங்கிலப்பாடத்தில் மாத்திரமன்றி நிர்வாகத்திற்கும்,பெரும் ஒத்துழைப்பு வழங்கிய ஒருவர் கல்லூரியின் பான்ட்வாத்தியக்குழுவிற்குபயிற்சி அளித்து அவர்களை நன்கு செயற்படவைத்தவர் விளையாட்டுத்துறையிலும் ஆர்வம் காட்டியதோடு ஒவ்வொரு போட்டிகளின் போதும் உற்சாகத்தோடுசெயற்பட்டு திறம்பட நடாத்துவதற்கு வழிவகுத்தவர். ஓய்வு பெற்ற பின்பும்சேவை மனப்பாங்குடன் மாணவர்களுக்கு ஆங்கில மொழியினையும் ஆங்கிலமொழி மூலம் மாணவர்களுக்கு சமூகக்கல்வியையும் கற்பித்து ஊக்கப்படுத்தி வரும் ஒருவர். மாணவர்களின் ஒழுக்கம், கட்டுப்பாடு, ஆகியவற்றில்பெரிதும்அக்கறை செலுத்தியவர். எப்பொழுதும் சுறுசுறுப்பாக கல்லூரியில்இயங்கி வந்த இவரது ஓய்வு கல்லூரிக்கு பேரிழப்பு என்றே கூறலாம்.இவரது ஓய்வு ஈடுகொடுக்கமுடியாத ஒன்றாக இருந்த போதிலும் அவரது ஓய்வு காலம் மகிழ்ச்சிகரமாக அமைய வேண்டுமென மனதார வாழ்த்துவதுடன்அவரது சேவைக்கு நன்றியை தெரிவித்துக்கொள்கின்றேன்.

கணித ஆசிரியரான திருமதி சு.குமாரவேல் சிறிது காலம் கல்லூரியில் கடமை புரிந்தாலும் எல்லோர் மனதிலும் நிரந்தரமான இடத்தைப்பிடித்த ஒருவர் கணித பாடத்தில் குறைந்த நிலையிலுள்ள மாணவர்களை அப்பாடத்தை விரும்பிக் கற்கக்கூடியமுறையில் வழிநடத்திச்சென்றவர். சுறுசுறுப்பாக .இயங்கி வந்த இவர் இல்ல மெய்வல்லுனர் போட்டியின் போது உற்சாகமாக செயற்பட்டவர். இவரது

சேவை எல்லோராலும் மதிக்கத்தக்கதாக அமைந்ததையிட்டுப் பெருமை அடைகிறேன். இவரது ஓய்வு காலம் சிறப்பாக அமைய வேண்டுமென வாழ்த்துகிறேன்.

இடமாற்றம் பெற்றோர்

விவசாய விஞ்ஞானப்பட்டதாரியான திருமதி.த.தேவராஜன் புத்தூருக்கு இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ளார். இவர் உயிரியல், விவசாயம், ஆகிய பாடங்களை நல்லமுறையில் கற்பித்த ஒரு ஆசிரியராவார். அவரது சேவையைப் பாராட்டுவதுடன் அவரது சேவைக்கான எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆசிரிய வாண்மை விருத்தி

திருமதி.நா.விஜயகாந்தன் ஆசிரியர் கல்வி முது தத்துவ மானிப்பட்டத்தை பெற்றுள்ளார்.

பரீட்சை பெறுபேறுகள்

க.பொ.த உயர்தரம் ஏப்பிரல் 2004 பரீட்சையில் பல்கலைக்கழகம் செல்லத்தகுதி பெற்றோர்.

உயிரியல் விஞ்ஞானம்	26
பௌதிக விஞ்ஞானம்	12
வர்த்தகம்	96
கலை	108

	242

க.பொ.த சா/த 2004 டிசம்பர் க.பொ.த(சா/த) பரீட்சையில் சித்தியடைந்து க.பொ.த உ/த கல்வி கற்க தகுதி பெற்றோர்.

சித்தியடைந்தோர்	176
தகுதிபெற்றோார்	176
பரீட்சைக்கு தோற்றியோரின் சதவீதம்	73%

விளையாட்டுத்துறை

திருமதி.ந.சிவசுப்பிரமணியம், செல்வி.ந.சாரதாதேவி ஆகியோர் விளையாட்டுத்துறைப் பொறுப்பாசிரியர்களாக பணியாற்றி வருகின்றனர். இவர்களுடன் திருமதி.ரோ.பாலஸ்கந்தன், செல்வி.பி.சொக்கலிங்கம் ஆகியோர் உடன் இருந்து பணிபுரிகின்றார்கள்.

வலைப்பந்தாட்டம்:~

கோட்டமட்டப் போட்டியில் 19 வயதுப்பிரிவினர் 1ம் இடத்தையும் 17 வயதுப்பிரிவினர் 3ம் இடத்தையும் 15 வயதுப் பிரிவினர் 2ம் இடத்தையும் பெற்றுக்கொண்டனர். வலயமட்டப் போட்டியில் 19 வயதுப் பிரிவினர் 2ம் இடத்தைப் பெற்றுக்கொண்டனர் பெரிய பிரித்தானியாவில் இருந்து வருகை தந்த தமிழ்ப்பாடசாலையின் பழைய மாணவர் சங்க உறுப்பினர்கள் எமது கல்லூரி மாணவர்களுடன் சினேக பூர்வமான வலைப்பந்தாட்டத்தை நடாத்தியதுடன் மாணவர்களை உற்சாகப்படுத்தி அன்பளிப்பும் செய்தனர். கல்லூரியின் விளையாட்டு வளர்ச்சிக்காக 10,000 ரூபா பணத்தினையும் கொடுத்துதவினர்.

உடற்பயிற்சி

வலயமட்டப் போட்டியில் 19வயதுப் பிரிவினர் 3ம் இடத்தினைப் பெற்றுக்கொண்டனர்.

சதுரங்கம்

வலயமட்டப் போட்டியில் 15வயதுப் பிரிவினர் 3ம் இடத்தினைப் பெற்றுக்கொண்டனர்.

மெய்வல்லுனர் நிகழ்வு

பொறுப்பாசிரியர்	திருமதி.ந.சிவசுப்பிரமணியம்.
பயிற்றுனர்	செல்வி.நா.சாரதாதேவி
அணித்தலைவி	செல்வி.லோகவதனி சிவலிங்கம்
துணைத்தலைவி	செல்வி.நதியா ஜெகதீஸ்வரன்

வருடாந்த இல்ல மெய்வல்லுனர் போட்டியில் அருந்ததி இல்லம் 1ம் இடத்தைப் பெற்றுக்கொண்டது. இவ்விழாவிற்கு யாழ் வலய கல்விப்பணிப்பாளர் திருவாளர். ப. விக்னேஸ்வரன் அவர்கள் பிரதமவிருந்தினராக வருகை தந்து சிறப்பித்தார். வெற்றி பெற்ற வீராங்கனைகளுக்கு திருமதி.தவமணி விக்னேஸ்வரன் அவர்கள் பரிசில்களை வழங்கிக் கௌரவித்தார்.

கோட்டமட்டப்போட்டிகளிலும், வலயமட்டப் போட்டிகளிலும், மாவட்டப்போட்டிகளிலும் பங்குபற்றி வெற்றி பெற்ற மாணவர்கள் மாகாண மட்ட போட்டிக்குத் தெரிவானார்கள். மாவட்டமட்ட போட்டியில் வெற்றிபெற்று செல்வி.ஹம்சினி உருத்திரேஸ்வரன் மாகாணமட்டப் போட்டிக்குத் தெரிவானார்.

மேலைத்தேச வாத்தியக்குழு

இக் குழுவிற்கு ஆசிரியை திருமதி ஞா வீரகத்திப்பிள்ளை பொறுப்பாக உள்ளார். செல்வி.பிரசாந்தி சொக்கலிங்கம அவர்கள் அவருக்கு உதவியாக உடனிருந்து ஒத்துழைப்பு வழங்குகின்றார். கல்லூரியின் தேவைகளுக்கு இவ்வாத்தியக்குழு ஒத்துழைப்பு நல்கி வருகின்றது.

மாணவமுதல்வர் சபை

அதிபரின் தலைமையின் கீழ் இயங்கும் இச்சபைக்கு பிரதிஅதிபர் திருமதி.வே. பேரின்பநாதன் அவர்கள் பொறுப்பாக உள்ளார். உபஅதிபர்.மீ.செல்லையா,திருமதி.ச. நரேந்திரன், திருமதி.த.ச.யோகீஸ்வரன், திருமதி.ரோ.பாலஸ்கந்தன், திருமதி.கா.சிவநேசன், திருமதி.ஜெ.சுஜிதன், திருமதி.க.பூலோகசிங்கம், திருமதி.பி.கலைநாதன், திருமதி.ம.சீவரத்தினம் ஆகியோர் இச் சபையில் அங்கம் வகிக்கின்றனர்.

முதுநிலை மாணவமுதல்வி	செல்வி.நிலக்சி மகாதேவன்
துணைமுதுநிலை மாணவமுதல்வி	செல்வி.நிருத்தாஞ்சலி.சிவானந்தா
விளையாட்டுத்துறை மாணவமுதல்வி	செல்வி.லோகவதனி.சிவலிங்கம்
துணைவிளையாட்டுத்துறை மாணவமுதல்வி	செல்வி.நதியா.ஜெகதீஸ்வரன்

உறுப்பினர் தொகை 59 இவர்கள் கல்லூரியின் நடைமுறைக்கு அமைய ஒழுங்கையும், பாரம்பரியத்தினையும் பேணிப்பாதுகாத்து வருகின்றனர். இவர்களுக்கு ஒழுக்காற்றுச் சபை ஆலோசனை வழங்கி வழிகாட்டி வருகின்றது. கனிஸ்ட மாணவர்களும் இதில் அங்கம் வகிக்கின்றனர்.

ஆசிரியர் கழகம்

தலைவர்	திருமதி.க.விமலநாதன்.
செயளாளர்	திருமதி.தி.குகதாசன்.
பொருளாளர்	திருமதி.ஜெ.சுஜிதன்.

ஆசிரியர்களின் நலனைக்கருத்தில் கொண்டு கருமமாற்றும் இச்சபை சக ஆசிரியர்களின் நன்மை தீமைகளில் பங்கு பற்றி தனது பங்களிப்பை செவ்வனே வழங்கி வருகின்றது. கல்லூரியின் வளர்ச்சிக்காக ஒத்துழைப்பதுடன் மாணவர்களின் கல்வி வளர்ச்சியில் பெரிதும் அக்கறை செலுத்திச் செயற்பட்டு வருகின்றது. சட்டநாதர் கோவில் திருவிழா ஒன்றினையும் ஆண்டுதோறும் செய்து வருகின்றது. ஓய்வுபெறும் ஆசிரியர்களையும் இடமாற்றம் பெற்றுச்செல்லும் ஆசிரியர்களையும் தக்க முறையில் கௌரவித்து வருவதில் தனது பங்கினை முழுமையாக ஆற்றி வருகின்றது. திருக்கேதீஸ்வர ஆலயத்திற்கும் சிவராத்திரி தினத்தை முன்னிட்டு நடைபெறும் உற்சவத்திற்கு பண

உதவி செய்து வருகின்றது.சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட வடமராட்சி மக்களுக்கு 45,000/- பெறுமதியான அத்தியாவசியப் பொருட்களை வழங்கி உதவியது. மிதிவெடியில் காலை இழந்த ஒருவருக்கும், சிறுநீரக அறுவைச்சிகிச்சைக்காக அப்பலோ வைத்தியசாலை நோயாளி ஒருவருக்கும் உதவி புரிந்தது.

இந்துமாமன்றம்

அதிபரைப் பெரும் காப்பாளராக கொண்டு இயங்கும் இம்மன்றத்தின் பொறுப்பாளராக திருமதி.கௌ.சிவகுமார் விளங்கினார். இவருக்கு பக்கதுணையாக திருமதி.இ.சந்திரலிங்கம், திருமதி.கா.சிவநேசன் ஆகியோர் செயற்பட்டனர். திருமதி.ச.சிவநாதன், திருமதி.ம.சீவரட்ணம், திருமதி.ப.வாகீஸ்வரிஅம்மா, திருமதி.ம.திருநாவுக்கரசு, திருமதி.ச.சிவகுமார், திருமதி.தே.உருத்திரசிங்கம், திருமதி.அ.குகானந்தம் ஆகியோர் இணைந்து செயற்பட்டனர்.

மன்றத்தலைவியாக செல்வி.காருண்யா.ஜெயபாலனும், உபதலைவியாக செல்வி.சிவசங்கரி. சிவமோகனும்,செயலாளராக.செல்வி.வற்சலா.பரமநாதனும்,உபசெயலாளராக, செல்வி.நதியா.ஜெகதீஸ்வரனும், பொருளாளராக செல்வி.தேனுதயா.சகாதேவனும் உபபொருளாளராக செல்வி. ரூபிகா.ரவீந்திரனும் பணியாற்றினர்.

சைவமும் தமிழும் தழைத்தோங்கவும் இந்து மகளிர் கல்லூரி மாணவிகளின் பண்பட்ட வாழ்க்கை மேம்படுவதையும் நோக்கமாகக் கொண்ட இம்மன்றத்தின் செயற்பாடுகள் கடந்த வருடம் சிறப்பாக நடைபெற்றன. நால்வரின் குருபூசை, சிவராத்திரி, நவராத்திரி விழா போன்றவற்றினையும் கொண்டாடினர். கல்லூரி வளாகத்தில் அமைந்த பிள்ளையார் ஆலயத்தின் வருடாந்த சங்காபிசேகமும் சிறப்பாக நடைபெற்றது. நவராத்திரி விழாவின் போது மாணவர்களின் ஆற்றலை வெளிப்படுத்தும் முகமாகப் பல்வேறு போட்டிகளும் நடாத்தப்பட்டன.

உயர்தர மாணவர் மன்றம்

இம்மன்றமானது திருமதி.ம.சிவானந்தநாதனைப் பொறுப்பாசிரியராகக் கொண்டு இயங்கியது. இம்மன்றத் தலைவராக செல்வி.தி.சுகன்யா, செயலாளர் செல்வி.ஜெ.ஜெனிற்றா, பொருளாளராக செல்வி.ப.கோமதி ஆகியோர் பணியாற்றினர். உயர்தர மாணவ மன்றக் கூட்டங்களை நடாத்தி மாணவர்களிடையே சிறந்த பண்புகளையும் தலைமைத்துவப் பண்புகளையும், திறன்களையும் வளர்த்து மாணவர்களிற்குப் பயனளிக்கத்தக்க கருத்தரங்குகளையும் ஒழுங்கு செய்து நடாத்தியது. வருடாந்த உயர்தர மாணவர் ஒன்றுகூடலுக்கு பிரதம விருந்தினராக யாழ் பல்கலைக்கழக வணிகத்துறைத் தலைவர் பேராசிரியர் தேவராஜன் அவர்களையும் அவர் தம் பாரியார் அவர்களையும் அழைத்து கௌரவித்து வைபவத்தை சிறப்பாக நடாத்தினர்.

தமிழ் மன்றம்

ஆண்டு தோறும் வெவ்வேறு ஆசிரியர்களைப் பொறுப்பாளராகக் கொண்டு இயங்கி வரும் இம்மன்றத்தின் பொறுப்பாளராக திருமதி.தி.குகதாசன் விளங்கினார். இவருக்குத் துணையாக திருமதி.க.சிவனேசன், திருமதி.சு.சோசை, திருமதி.க.விமலநாதன், திருமதி.ப.சுந்தரலிங்கம், திருமதி.சி.றோய்நேசராஜா,திருமதி.இ.இராஜமனோகரன்,திருமதி.சௌ.சுபாஸ்கரன், திருமதி.ஆ.செங்கதிர்ச்செல்வன் ஆகியோர் உடனிருந்து செயலாற்றுகின்றனர்.

கோட்டமட்ட, வலயமட்ட, தேசியமட்டத் தமிழ்த்தினப் போட்டிகளில் பங்குபற்றி பல வெற்றிகளைப் பெற்றுக்கொண்டனர். செல்வி பிரவீனா ஸ்ரீதரன் பிரிவு 2இல் தனிநடனத்தில் மாவட்ட மட்டத்தில் முதலிடத்தினைப் பெற்று மாகாண மட்டத்திற்குத் தெரிவு செய்யப்பட்டார். "பாஞ்சாலி சபதம்" நாட்டிய நாடகம் தேசிய மட்டத்தில் 1ம் இடத்தினைப் பெற்றுக்கொண்டது. மாணவர்களின் மொழித்திறன், கலைத்திறன் ஆகியவற்றை வளர்ப்பதில் ஆர்வமுடன் செயற்படும் இம்மன்றத்தின் தலைவராக செல்வி.சிவசங்கரி சிவமோகன் செயலாளராக செல்வி.அபர்ணா அருளானந்தம் பொருளாளராக செல்வி.நிரோஷினி கதிர்காமசிங்கம் ஆகியோரும் செயற்பட்டனர். கல்லூரியின் தமிழ்த் தின விழாவிற்கு பிரதம விருந்தினராக திருவாளர் கலாநிதி திருநாவுக்கரசு அவர்கள் வருகை தந்து ஆக்கபூர்வமான கருத்துக்களை வழங்கியதுடன் மாணவர்களுக்கு பரிசில்களை வழங்கிச் சிறப்பித்தார்.

விஞ்ஞான மன்றம்

உயர்தர விஞ்ஞான மன்றம் திருமதி.பி.சிறிகணேஸ் அவர்களையும் கனிஷ்ட மன்றம் திருமதி.வ.சுரேஸ் அவர்களையும் காப்பாளராகக் கொண்டு இயங்கியது. இம் மன்றத்தின் தலைவராக செல்வி.சரிதா கந்தசாமியும் செயலாளராக செல்வி.றஜனி சந்திரகுமார் அவர்களும் பொருளாளராக செல்வி.திலீபா தர்மராசாவும் விளங்கினர். மாணவர்களின் விஞ்ஞான அறிவினை வளர்க்கும் நோக்கமாக பேச்சுப்போட்டி, வினாடி வினாப்போட்டி, கட்டுரைப்போட்டி ஆகியவற்றை நடாத்தி வெற்றி பெற்ற மாணவர்களிற்கு பரிசில்களை வழங்கி கௌரவித்தது. விஞ்ஞான தின விழாவிற்கு பிரதம விருந்தினராக வைத்திய கலாநிதிகள் திரு திருமதி.ஜதீசன் அவர்கள் கலந்து சிறப்பித்தனர். இம்மன்றத்தினால் முகை -2 சஞ்சிகையும் வெளியிடப்பட்டது. இம்மன்றத்தில் திருமதி.ச.நரேந்திரன், திருமதி.த.தேவராஜன், திருமதி.பு.தர்மகுலசிங்கம், செல்வி.சி.நல்லதம்பி, திருமதி.சி.விஜயகிருஷ்ணன், செல்வி.கோ.பாலசுப்பிரமணியம், செல்வி.ஜ.வரதராஜப்பெருமாள திருமதி.றோ.பாலஸ்கந்தன், திருமதி.பி.கலைநாதன், திருமதி.கீ.துரைசிங்கம், திருமதி.என்.விக்னேஸ்வரன், திருமதி.ல.லிங்கேஸ்வரன், திருமதி.சி.சிறிகாந்தன், செல்வி.க.நமசிவாயம் ஆகியோர் இணைந்து செயலாற்றி வருகின்றனர். சக்தி F.M நடாத்திய வினாடி வினாப்போட்டியில் எமது மாணவிகள் பங்குபற்றினர்.

கணித மன்றம்

திருமதி.ம.சீவரட்ணத்தினைப் பொறுப்பாளராகக் கொண்டு இம்மன்றம் இயங்கி வருகின்றது. இம் மன்றம் கணித விஞ்ஞான தினத்தையொட்டி வினாடி வினாப் போட்டி, கண்காட்சி என்பவற்றை நடாத்தி மாணவர்களுக்கு சான்றிதழ்களை வழங்கி ஊக்குவித்து வருகின்றது. இம் மன்றத்தில் திருமதி.ய.சண்முகரட்ணம், செல்வி.சி.நல்லதம்பி, செல்வி.நி.சோமசுந்தரம், திருமதி.அ.மேகநாதன், திருமதி.சு.பிரசாத், செல்வி.ம.சுப்பிரமணியம், திருமதி.சு.பழனிமலைநாதன், திருமதி.சு.குமாரவேல் ஆகியோர் இணைந்து செயற்பட்டனர். உயர்தர விஞ்ஞான மன்றம், கனிஷ்ட விஞ்ஞான மன்றத்துடன் இணைந்து வருடாந்த விஞ்ஞான தினத்தைக் கொண்டாடியது. கணிதத்தில் குறைந்த மாணவர்களிற்கு விசேட வகுப்புக்களை நடாத்தி அவர்களை ஊக்குவித்தமை பாராட்டிற்குரியது.

விவசாய மன்றம்

இம் மன்றம் திருமதி.த.தேவராஜன் அவர்களைப் பொறுப்பாளராகக் கொண்டு இயங்கியது. விவசாயம் கற்கும் மாணவர்களை ஊக்குவிக்கும் பொருட்டு பாடசாலை மட்ட, கோட்ட மட்ட வினாடி வினாப் போட்டி, கண்காட்சி போன்றவற்றில் மாணவர்களைப் பங்கு பற்றச் செய்தது. மாணவர்களின் விவசாய அறிவினை மேம்படுத்தும் பொருட்டு திருநெல்வேலி விவசாயப் பண்ணை, வாணிலை அவதானிப்பு நிலையம் போன்றவற்றிற்கு அழைத்துச் சென்று அவர்களின் அறிவு வளர்ச்சிக்கு மேலும் மெருகூட்டி வருகின்றனர். இம் மன்றத்தின் தலைவியாக செல்வி.தனுசியா தர்மகுலசிங்கமும் செயலாளராக செல்வி.ஜெனனி மகாலிங்கமும், பொருளாளராக செல்வி.தாரணி ஸ்ரீபாலச்சந்திரனும் இருந்து மன்றம் திறம்பட இயங்குவதற்கு தம்மாலான பங்களிப்பினை வழங்கி வருகின்றனர்.

புவியியல் மன்றம்

செல்வி.ப.சிவசித்ரா ஆசிரியரைப் பொறுப்பாளராகக் கொண்ட இம்மன்றம் மாணவர்களின் புவியியல் அறிவினை மேம்படுத்தும் வகையில் செயற்பட்டு வருகின்றது. இம்மன்றத்தின் தலைவராக செல்வி.து.ஹரிணியும் செயலாளராக செல்வி.ஜெ.நதியாவும் பொருளாளராக செல்வி.செ.செந்துஷாவும் இருந்து செயற்பட்டனர். திருமதி.அ.ஸ்ரீஸ்கந்தராஜா ஆசிரியரும் இம்மன்றத்தின் செயற்பாடுகளுடன் இணைந்து செயற்பட்டு வருகின்றார்.

வர்த்தக மாணவர் மன்றம்

திருமதி.சி.ஞானசுப்பிரமணியம் அவர்களைப் பொறுப்பாளராகக் கொண்டு இயங்கும் வணிக மன்றத்தின் தலைவராக செல்வி.க.தர்மிளாவும் செயலாளராக செல்வி.க.பிரசாந்தியும் செயற்பட்டனர். மாணவர்களின் அறிவுத் திறனை மேம்படுத்தும் வகையில் பாடசாலை மட்டத்தில் 10ம், 11ம் தர

மாணவர்களிடையே வணிக குறு வினா விடைப் போட்டியும் நடாத்தி வெற்றி பெற்ற மாணவர்களிற்கு சான்றிதழ்களை வழங்கியது.

மாணவர்களது ஆளுமை வளர்ச்சி, சமூகத் தொடர்பு, தலைமைத்துவம், பண்பு போன்றவற்றை வெளிக் கொணரும் வகையில் செயற்படும் இம்மன்றம் இம்முறையும் வணிகவனிதை சஞ்சிகை இதழ்-8 வெளியிட்டு வணிகவிழாவைச் சிறப்பாகக் கொண்டாடியது. வணிக விழாவிற்குப் பிரதம அதிதியாக யாழ் வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு.ந.வரதராஜா அவர்கள் கலந்து சிறப்பித்தார். இம் மன்றத்தில் திருமதி.த.ச.யோகீஸ்வரன், திருமதி.ஸ்ரீ.அருள்வேல், திருமதி.கௌ.சிவகுமார், திருமதி.ம.சிவானந்தநாதன், திரு.ப.கமலதாசன், திரு.இ.கிருஷ்ணானந்தன், செல்வி.பி.சொக்கலிங்கம், ஆகியோர் இணைந்து செயற்படுகின்றனர்.

English Union

The English union functioned extremely well, Mrs G. Veeragathipillai being the teacher in charge together with the teachers of English Mrs.L.Gunaratnam, Mrs.J.Sujithan, Mrs.U.Jeyarajah, Mrs.K.Tharmakunasingam and also the other non teachers of English. The union provided almost all the students ample opportunity to engage themselves in various skills by means of conducting class level competition and later school level competitions in Reading, writing and speaking skills, in order to bring out their hidden talents to exposure.

The school English day celebration was held on the 2 nd November 2004. Mr.S.Thiagarajah ADE English Jaffna Zone as the chief guest. The union's tremendous effort in organizing variety of activities for the students in initiating their knowledge in English and maintain to keep up the standard of English.

நுண்கலை மன்றம்

திருமதி.ம.திருநாவுக்கரசு அவர்களை பொறுப்பாசிரியராகக் கொண்ட இம்மன்றம் திறம்பட செயற்பட்டு வருகின்றது. இம்மன்றத்தில் திருமதி.ச.சிவகுமார், திருமதி.தே.உருத்திரசிங்கம், திருமதி.அ.குகானந்தம், செல்வி.பே.பிரியதர்சினி, செல்வி.சு. பிரபாஷினி, ஆகியோர் இணைந்து செயற்பட்டனர். இம்மன்றத்தில் தலைவராக செல்வி.ஜே.கஜமுகி செயலாளராக செல்வி.செ.செந்துஷா பொருளாளர், க.சிவச்செல்வி ஆகியோர் செயற்பட்டனர். தமிழ்த்தின விழாக்களின் போது இசை நடன நாடகப் போட்டிகளில் மாணவர்களை வழிப்படுத்தி வருகின்றது.

சமூகக்கல்வி மன்றம்

திருமதி.நா.விஜயகாந்தனைப் பொறுப்பாளராகக் கொண்ட இம்மன்றம் பொதுஅறிவு, வினாவிடைப் போட்டிகள், கண்காட்சி ஆகியவற்றை பாடசாலை மட்டத்தில் நடாத்தியது. சமூகக்கல்வி பொதுஅறிவுப் போட்டியில் மாணவர்கள் பங்குபற்றினர். இம்மன்றத்தில் திருமதி.ப.சுந்தரலிங்கம், திருமதி.அ.ஸ்ரீஸ்கந்தராஜா, திருமதி.க.பூலோகசிங்கம், செல்வி.ப.சிவசித்ரா, திருமதி.சௌ.சுபாஸ்கரன், திருமதி.ந.இராகவன், திருமதி.ந.விஜயகாந்தன் ஆகியோர் இணைந்து செயற்படுகின்றனர்.

யாழ் வலயம் நடாத்திய கற்பித்தல் உபகரணக் கண்காட்சியில் இம்மன்றத்தைச் சேர்ந்த ஆசிரியர்கள் பங்குபற்றினர். இம்மன்றத்தின் தலைவராக செல்வி.சே.இலச்சனாவும், செயலாளராக செல்வி.சி.சிவரூபினியும், பொருளாளராக செல்வி.ச.ஜனுசியாவும் திறம்படச் செயற்பட்டனர்.

மனைப் பொருளியல் மன்றம்

செல்வி.ம.மகாதேவாவை பொறுப்பாளராகக் கொண்டு இயங்கும் இம்மன்றத்தில் பத்தாம், பதினொராம் தரத்திலும் க.பொ.த.உயர்தரத்திலும் மனைப்பொருளியலைப் பாடமாகக் கற்கும் மாணவர்கள் அங்கம் பெறுகின்றனர். இம்மன்றத்தின் தலைவராக செல்வி.சி.நிஷாந்தியும், செயலாளராக செல்வி.ஜெ.ஜெலித்தாவும், பொருளாளராக செல்வி.த.தர்சினியும் செயற்பட்டனர். சிற்றுண்டிச்சாலை ஒன்றை ஆரம்பித்து மாணவர்கள் கற்கும் போதே உழைப்பதற்கும் வழிகாட்டி வருகின்றது.

கணணிமன்றம்

பெற்றோர்களின் ஒத்துழைப்புடன் தரம் 6 இல் இருந்து 13ம் தரம் வரை சகல மாணவர்களும் கணணிக்கல்வியைக் கற்கிறார்கள். இதன் பொறுப்பாசிரியராக செல்வி.ஆனந்தசக்தி தணிகாசலம் விளங்குகின்றார். முறைசாராக் கல்வியின் கீழ் பயிற்சி பெறும் மாணவர்களிற்கும் பயிற்சி அளிக்கப்படுகின்றது. மன்றத்தின் பொறுப்பாசிரியராக திருமதி.கீ.துரைசிங்கம் அவர்கள் விளங்கினார். தலைவராக செல்வி.த.தனுசியாவும், செயலாளராக செல்வி.க.சிந்துஜாவும், பொருளாளராக செல்வி.க.சிந்துஜீவனியும் விளங்கினர். கல்வித்திணைக்களத்தால் கணணிக் கல்வியின் உதவிப்பயிற்றுவிப்பாளராக செல்வி.துஷாரா மகாதேவனும், செல்வி.நிருஜா உருத்திரேஸ்வரனும் நியமிக்கப்பட்டார்கள். யாழ் மாவட்டத்தைச் சேர்ந்த பல ஆசிரியர்களிற்கும் எமது கல்லூரி ஆய்வு கூடத்தில் பயிற்சி அளிக்கப்பட்டது. இக் கணணிச் செயற்பாடு நல்ல முறையில் நடைபெறுவதற்கு உதவிவரும் அனைவருக்கும் எனது பாராட்டினையும் நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

சாரணியம்

இக்குழுவிற்குப் பொறுப்பாசிரியராக கப்டன்.த.ச.யோகீஸ்வரன் அவர்கள் விளங்குகிறார். உதவியாளர்களாக லெப்ரினன்கள் திருமதி.ப.பாலச்சந்திரன், திருமதி.ல.லிங்கேஸ்வரன் ஆகிய வழிகாட்டுனர்கள் உடனிருந்து செயற்பட்டு வருகின்றனர். 36 வழி காட்டிகள் இதில் அங்கம் வகிக்கின்றார்கள். பொறுப்பாசிரியர்களும் வழிகாட்டி மாணவிகளும் பயிற்சி பெற்று வருகின்றனர். பேடன் பவல் நினைவுதின விழாவில் ஆர்வமுடன் பங்குபற்றித் தமது பங்களிப்பினை ஆற்றிவருகின்றனர். கல்லூரியின் உள்ளும் புறமும் நடைபெறும் நிகழ்வுகளில் தம்மாலான ஒத்துழைப்பினை ஆற்றி வருகின்றனர். இவர்களது சேவை மேலும் வளர வேண்டுமென வாழ்த்துகின்றேன்.

சென்ஜோன்ஸ் முதலுதவிப்படை

இதன் பொறுப்பாசிரியராக திருமதி.ரோ.பாலஸ்கந்தன் அவர்களும் துணையாசிரியராக செல்வி.பி.சொக்கலிங்கம் அவர்களும் இணைந்து செயற்பட்டு வருகின்றனர். இப் படைப்பிரிவில் 50 உறுப்பினர்கள் இடம்பெற்றுள்ளனர். புதிதாக இணையும் அங்கத்தவர்களுக்கு சான்றிதழ்களையும் வழங்கி வருகின்றது. கல்லூரியில் நடைபெறும் விளையாட்டுப்போட்டியிலும் ஏனைய விழாக்களிலும் அக் கழக அங்கத்தவர்கள் ஒத்துழைப்பு வழங்கி வருகின்றனர்.

கல்லூரி கூட்டுறவுச் சங்கம்

இச்சங்கத்தின் பொறுப்பாளர்களாக திருமதி.ம.சீவரட்ணம் அவர்களும் அவர்களுக்கு உதவியாக திருமதி.ஸ்ரீ.அருள்வேல் அவர்களும் விளங்குகின்றனர். மாணவர்களுக்குத் தேவையான கற்றல் உபகரணங்கள், சிற்றுண்டி வகைகள், கழுத்துப்பட்டி, காலுறை போன்றவற்றை நியாயமான விலையில் வழங்கி வருகின்றனர். கல்லூரிப் பரிசளிப்பு விழாவிற்கு ஒரு பகுதி நிதியுதவியை அளித்து உதவி புரிகின்றனர். கல்லூரி மாணவிகளின் பிறந்ததினங்களுக்கு அன்பளிப்புச் செய்து ஊக்குவித்து வருகின்றது.

இன்ரறற் கழகம்

திருமதி.அ.நி.பழனிமலைநாதன் அவர்களையும் திருமதி.க.தர்மகுணசிங்கம் அவர்களையும் பொறுப்பாளராகக் கொண்டு இயங்கும் இக்கழகம் மாணவிகளைச் சிறந்த சமூக சேவையாளராக்குவதில் முன்னின்று உழைக்கின்றது. இம்மன்றத்தில் தலைவராக செல்வி.வை.சஞ்சிதீபாவும் செயலாளராக செல்வி.லோகவதனியும் இணைந்து செயற்பட்டனர்.

கல்லூரிக்குத் தேவைப்படும் போது தம்மாலான உதவிகளைச் செய்து வருகின்றனர். சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஒரு பகுதி நிதியுதவியையும் செய்துள்ளனர்.

லியோ கழகம்

செல்வி.சி.நல்லதம்பி அவர்களின் வழிகாட்டலுடன் திருமதி.உ.ஜெயராசா அவர்களின் உதவியுடனும் செயற்பட்டு வருகின்றது. இக் கழகத்தின் தலைவியாக செல்வி.க.நிரோஷினியும் செயலாளராக செல்வி.வே.லோஜிகாவும் பொருளாளராக செல்வி.கு.பிரதீபாவும் விளங்கினார்கள்.

மாணவர் அடையாள அட்டை

கல்லூரி மாணவர்களுக்கான பாடசாலை அடையாள அட்டை வழங்குவதற்கு திருமதி.பி.கலைநாதன் ஆசிரியர் பொறுப்பாகவுள்ளார். தேசிய அடையாள அட்டைகளை வழங்குவதற்கு திருமதி.கா.சிவநேசன் அவர்கள் பொறுப்பாக இருந்து செயற்பட்டு வருகின்றார். தபால் அடையாள அட்டைகளைப் பெறுவதற்கு திருமதி.ரோ.பாலஸ்கந்தன் அவர்கள் பொறுப்பாக இருந்து உதவிபுரிந்து வருகின்றார்கள்.

மாணவர் பருவச்சீட்டு

மாணவர்களின் போக்குவரத்து வசதி கருதி இலங்கைப் போக்குவரத்துச் சபையினரின் பருவச்சீட்டினைப் பெற்றுக்கொள்வதில் திருமதி.க.விமலநாதன், திருமதி.ப.சுந்தரலிங்கம், திருமதி.பி.ஸ்ரீகணேஸ் ஆகியோர் உதவிபுரிந்து வருகின்றனர். இவர்களுக்குத் துணையாக திரு.இ.கிருஷ்ணானந்தனும் செயற்பட்டு வருகின்றார்..

முறைசரராக் கல்வி

பாடசாலையை விட்டு விலகிய மாணவர்களுக்கு கல்வித்திணைக்களத்தால் முறைசாராக் கல்விப் பயிற்சி அளிக்கப்படுகின்றது. இதன் கீழ் சிகையலங்காரம், அலங்காரப் பொருட்கள் தயாரித்தல், கணனிப் பயிற்சி ஆகியன கற்பிக்கப்படுகின்றன. இது மாணவர்களுக்குப் பெரிதும் பயனளிக்கின்றது.

பாடசாலை அபிவிருத்திச் சங்கம்

இச் சங்கமானது கல்லூரியின் அபிவிருத்தியில் அக்கறை கொண்டு நிர்வாகத்துடன் இணைந்து ஒத்துழைப்பு நல்கி வருகின்றது. இதன் செயலாளராக திரு.இரா.செல்வவடிவேல் அவர்கள் விளங்கினார். கல்லூரியின் க.பொ.த.(சா/த) பரீட்சையில் 6 க்கு மேற்பட்ட அதிவிசேட சித்தி பெற்ற மாணவர்களுக்கு பெறுமதி வாய்ந்த பரிசில்களைக் கொடுத்து உற்சாகப்படுத்தியது. ஆசிரியர் தினத்தின் போது சகல

ஆசிரியர்களுக்கும் அன்பளிப்புச் செய்து 25 வருட சேவையை முடித்துக் கொண்ட ஆசிரியர்களை விசேடமாகக் கௌரவித்தது. பரிசளிப்பு விழாவின் போது மதிய உணவினையும் வழங்கியது. மாணவர்கள் கணனிக் கல்வியைக் கற்பதற்கு ஊக்குவித்து உதவி வழங்கியது. வகுப்பறைகளின் தளங்களின் உடைவுகளைச் செப்பனிட்டுத் திருத்தியது.

சஞ்சிகை வெளியீடு

